# முக கவசம் தயாரிப்பு!

தற்போதைய சூழ்நிலையில் நாம் திணரி கொண்டிருக்கும் சூழல், முக கவசம் அணிவது. சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் முக கவசம் அத்தியாவசியம் ஆகிவிட்டது. இந்த சூழ்நிலையில் மிக எளிய முறையில் முக கவசம் தைத்து அதன்மூலம் குறைவான முதலீட்டில் எவ்வாறு நிறைவான இலாபம் சம்பாதிக்கலாம் என்பதை பார்போம்.

## தேவையான உபகரணங்கள் :

தையல் இயந்திரம்

தையல் இயந்திரத்திற்கு பயன்படுத்தும் நூல்

துணி வகைகள்

எலாஸ்டிக் நாடா

## செய்முறை விளக்கம் :

நமக்கு தேவையான துணி வகைகளை தேர்வு செய்துக் கொள்ளலாம். காட்டன் மெட்டீரியல், பணியம் மெட்டீரியல் மற்றும் தேவைக்கேற்ப தேர்வு செய்துக் கொண்டு முககவசத்திற்கு தேவையான அளவு அதனை கட் பண்ணி கொள்ள வேண்டும். நீள வடிவில் துணியை மூன்று பகுதியாக கட் செய்ய வேண்டும்.

வெட்டிய துணிகளை தையல் இயந்திரத்தின் உதவியுடன் துணிக்கு ஏற்ற நிறத்தில் நூல் போட்டு நான்கு பக்கங்களிலும் தைத்து நடுவில் இருக்கும் துணியில் எலாஸ்டிக் நாடா வைத்து தைத்துக் கொள்ள வேண்டும். நமக்கு தேவையான அளவுகளில் இதனை வடிவமைத்துக் கொள்ளலாம். இப்பொழுது நமக்கு தேவையான முக கவசங்கள் தயார்.

இதனை அவரவர் உடைகளுக்கு ஏற்ற நிறங்களில் தைத்து கொடுப்பதன் மூலம் நல்ல லாபம் பெறலாம்.

## விற்பனை முறைகள் :

இதனை அருகில் உள்ள வீடுகள் மற்றும் சிறிய மற்றும் பெரியகடைகளுக்கு கொடுத்து நிறைவான இலாபம் பார்க்கலாம்.

# Magic Pillow Printing தயாரிப்பு!

இந்த தயாரிப்பு தொழிலை பொறுத்தவரை தற்பொழுது ட்ரெண்டிங்கில் உள்ள தொழில் என்பதால் தயக்கம் இல்லாமல், இந்த தொழிலை செய்யலாம். குறிப்பாக மக்கள் தற்பொழுது வித்தியாசமான முறையில் தங்கள் நெருக்கமான நண்பர்கள் மற்றும் உறவினர்களின் பிறந்தநாள், திருமணம் அல்லது இல்ல விசேஷங்களுக்கு பரிசளிக்க இதுமாதிரியான **Magic Pillow**-வில் அவர்களது உருவத்தை பதித்து, அவர்களுக்கு பரிசளித்து தங்களுடைய அன்பினை வெளிப்படுத்துகின்றனர். எனவே இந்த **Magic Pillow Printing** தயாரிப்பு தொழிலுக்கு மக்களிடம் அதிக வரவேற்பு உள்ளதால், இந்த புதிய தொழிலை செய்வதன் மூலம் நல்ல வருமானம் பெற முடியும்.

## தேவைப்படும் இயந்திரம் மற்றும் பொருட்கள் :

1. Printing Machine
2. Sublimation Printing Machine
3.Computer
4. Sublimation Magic Pillow
5. Sublimation Ink
6. Sublimation Paper

**தயாரிக்கும் முறை:**

முதலில் வாடிக்கையாளர்கள் கொடுக்கும் புகைப்படங்களை வாங்கி அவற்றை பிரிண்டிங் இயந்திரத்தில் **Sublimation Paper**-ஐ பொருத்தி பிரிண்ட் செய்து கொள்ளுங்கள்.

பின் **Sublimation Magic Pillow**-வில், பிரிண்ட் செய்த புகைப்படத்தை நன்றாக ஒட்டி **Sublimation Printing Machine**-ன் மூலம் ஹீட் செய்வதன் மூலம் **Sublimation Magic Pillow**-வில் புகைப்படம் பிரிண்ட் செய்யப்படும்.

இப்பொழுது மேஜிக்கல் பில்லோ தயார். இவ்வாறு தயார் செய்த ஒரு மேஜிக்கல் பில்லோவினை 750 ரூபாய் வரை வாடிக்கையாளர்களிடம் விற்பனை செய்யலாம்.

இந்த இயந்திரத்தை பயன்படுத்தி பலவகையான பொருட்களிலும் புகைப்படங்களை பிரிண்ட் செய்யலாம். அதாவது ஸ்கூல் பேக், டீ கப், கீ செயின் போன்ற பொருட்களிலும் புகைப்படங்களை பிரிண்ட் செய்து கொடுக்கலாம். இதன் மூலம் அதிக லாபம் பெறலாம்.

**விற்பனை செய்யும் முறை :**

மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களில், பள்ளி மற்றும் கல்லூரி உள்ள இடங்களில் இந்த தொழிலை ஆரம்பிக்கலாம்.

ஆன்லைனில் தங்களுக்கென ஒரு புதிய Website-யை ஆரம்பித்து அதன் மூலமாகவும், வாடிக்கையாளர்களை பெறலாம்.

உங்கள் ஊரில் உள்ள போட்டோ ஸ்டுடியோகளுக்கு நேராக சென்று அங்கேயும் ஆர்டர்களை பெறலாம்.

## Egg Shell Powder தயாரிப்பு!

நாம் தினந்தோறும் குப்பையில் தூக்கி எறியும் முட்டை ஓட்டிலிருந்து தான் பல இலட்சம் வருமானம் தரக்கூடிய இந்த கால்சியம் கார்பனேட் பவுடர் **(Egg Shell Powder)** தயாரிக்கப் படுகிறது. இந்த பவுடர் தயாரிக்கும் முறை மிக மிக எளிது. இந்த தொழிலை பெண்கள் வீட்டிலிருந்தே தொடங்கலாம்.

**தேவையான பொருட்கள் :**

1. முட்டை ஓடு
2. தண்ணீர்

**தயாரிக்கும் முறை :**

Egg Shell Powder தயாரிக்கும் முறைகள் இரண்டு உள்ளது. ஒன்று

உரங்கள் பயன்பாட்டிற்கு மற்றொன்று கால்நடைகள் மற்றும் மனிதர்களின்

கால்சியம் சத்து குறைப்பாட்டிற்கும் பயன்படுகிறது.

**உரங்கள் பயன்பாட்டிற்கு,**

முதலில் முட்டை ஓடுகளை சேகரித்து தண்ணீரில் இரண்டு முறை நன்றாக தேய்த்து கழுவ வேண்டும்.

பின் இந்த ஓடுகளை மொட்டை மாடியில் சுத்தமான துணியை விரித்து வெயிலில் காய வைக்க வேண்டும்.

நன்றாக காய்ந்த பின் மிக்சியில் போட்டு பவுடராக வரும் வரை அரைத்து அதனை சல்லடையில் சலித்து எடுக்க கொள்ள வேண்டும்.

அவ்வாறு சலித்து எடுக்கப்பட்ட பவுடரை 1 கிலோ, 5கிலோ, 10 கிலோ, 25 கிலோ ஆகிய அளவுகளில் பேக்கிங் செய்து உரக்கடைகளில் விற்பனை செய்யலாம்.

### கால்நடைகள் மற்றும் மனிதர்களுக்கு கால்சியம் சத்து குறைபாட்டிற்கு,

முதலில் முட்டை ஓடுகளை சேகரித்து தண்ணீரில் இரண்டு முறை நன்றாக தேய்த்து கழுவ வேண்டும்.

பின் இந்த ஓடுகளை நுண்ணலை அடுப்பில் **(Microwave Oven)** 400° வெப்ப நிலையில் **15** நிமிடங்கள் வைத்து சூடேற்ற வேண்டும்.

ஓடுகளை மிக்சியில் போட்டு பவுடராக வரும் வரை அரைத்து அதனை மைக்ரோ பல்வனைசர் சல்லடையில் சலித்து எடுக்க கொள்ள வேண்டும்.

அவ்வாறு சலித்து எடுக்கப்பட்ட பவுடரை 1 கிலோ, 5 கிலோ, 10 கிலோ, 25 கிலோ ஆகிய அளவுகளில் பேக்கிங் செய்து விற்பனைக்கு அனுப்பலாம். (குறிப்பு : FSSAI License, MSL license மற்றும் Drug License வாங்கி வைத்துக் கொண்டால் பெரிய அளவில் வருவாய் ஈட்ட முடியும்.)

### விற்பனை செய்யும் முறை :

உரக் கடைகள், கால்நடை மருந்தகங்கள், பண்ணைகள், மருந்துக் கம்பெனிகள், பற்பசை நிறுவனங்களுக்கு மொத்தமாகவும் சில்லரையாகவும் விற்பனை செய்வதன் மூலம் நல்ல வருமான பார்க்கலாம்.

### பயன்பாடுகள் :

மரம், செடிகளுக்கு கால்சியம் சத்திற்காக உரமாக பயன்படுகிறது.

கால்நடைகளுக்கு கால்சியம் சத்து குறைபாட்டிற்கு மருந்தாக உணவுடன் கலந்து கொடுக்கப்படுகிறது.

மனிதர்களுக்கு இந்த Egg shell Powder ஒரு கால்சியம் நிவர்த்தியாக செயல்படுகிறது.

பற்பசை தயாரிக்கப் பயன்படுகிறது.

# Copper Wire Scrap தயாரிப்பு!

**Copper Wire Scrap** செய்து சுழற்சி முறையில் மறுபடியும் விற்பனை செய்வதன் மூலம், நாம் நல்ல வருமானம் பெறலாம். இந்த காப்பர் ஒயரினை பிரித்து விற்பனை செய்வது என்பது தங்கத்திற்கு நிகரான தொழிலாகும், அதேபோல் சந்தையில் அதிக அளவில் வரவேற்கப்படுகிறது. எனவே இந்த தொழில் வாய்ப்பை பொறுத்தவரை படிக்காத ஆண், பெண் இருபாலரும் கூட வீட்டில் இருந்தபடியே குறைந்த மின்சார செலவிலேயே காப்பர் ஒயரை பிரித்தெடுத்து விற்பனை செய்வதன் மூலம் நல்ல லாபம் பெறலாம்.

## தேவைப்படும் இயந்திரம் மற்றும் பொருட்கள் :

1.automatic Scrap Copper Wire Stripping Machine
2. PVC Cable Scrap

## தயாரிக்கும் முறை :

முதலில் **Automatic Scrap Copper Wire Stripping Machine-ஐ** ஆன்லைனில் ஆர்டர் செய்து வாங்க வேண்டும்.

பின்னர் வீட்டில் இந்த இயந்திரத்தை வைப்பதற்கு சரியான இடத்தை தேர்வு செய்ய வேண்டும்.

இந்த **Automatic Scrap Copper Wire Stripping Machine-ஐ** வீட்டில் இருந்தபடியே மிக குறைந்த மின்சார செலவில் இயக்கலாம்.

இந்த இயந்திரத்தில் 20 வகையான ஓட்டைகள் அமைக்கப்பட்டிருக்கும். எனவே இயந்திரத்தை ஆன் (ON) செய்து அந்த ஓட்டைகளில் PVC ஒயர்களை நுழைக்க வேண்டும்.

அவ்வாறு நுழைக்கும் போது மறுபக்கத்தில் PVC ஒயர்களின் நடுவில் பிளவு ஏற்பட்டு வெளியே வரும்.

பின் அதிலிருந்து ஒயரையும் காப்பரையும் தனித்தனியாக பிரித்தெடுக்க வேண்டும். இவ்வாறு பிரித்தெடுத்த இரண்டையும் மறுபடியும் விற்பனை செய்யலாம்.

## விற்பனை வாய்ப்பு:

PVC ஒயர்கள் உற்பத்தி செய்யும் இடங்களுக்கு நேராக சென்று ஆர்டர் பெற்று தாங்கள் பிரித்தெடுத்த காப்பரினை விற்பனை செய்யலாம்.

அதேபோல் காப்பரை பிரித்தெடுத்தப் பின் தனியாக இருக்கும் ஒயர்களை PVC ஒயர்கள் தயார் செய்யும் நிறுவனங்களிடம் விற்பனை செய்யலாம்.

# அழகு கலை தொழில்

இக்காலக் கட்டத்தில் அழகு கலை தொழில் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வருகிறது. புதிதாக தொழில் தொடங்க வேண்டும் என்று நினைக்கும் பெண்களுக்கு இத்தொழில் மிகுந்த வரவேற்பை அளிக்கும். இதன் மூலம் நல்ல இலாபம் பெறலாம்.

**முறையான பயிற்சி :**

பெரும்பாலான பெண்கள் தங்களை அழகாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைப்பார்கள்.

அழகு கலையில் ஆர்வம் உள்ள பெண்கள் எளிதில் அழகு கலை பயிற்சி பெற்று இத்தொழிலை தொடங்கலாம்.

திருமணம், சீமந்தம் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கும் மேக்கப் தேவைப்படுகிறது. இதன் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இத்தொழிலுக்கான பயிற்சியானது இப்பொழுது அனைத்து இடங்களிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

திருமண நாட்களில் இத்தொழிலுக்கான மவுசு அதிகளவில் காணப்பட்டு வருகிறது. மேலும் பூப்பு நன்னீராட்டு விழா, சீமந்தம் போன்ற பெண்களுக்கான ஏராளமான சடங்குகளிலும் மேக்கப் போடுவதன் மூலம் அதிகப்படியான இலாபம் சம்பாதிக்கலாம்.

ஒப்பனை, மெகந்தி டிசைனிங், நகப்பூச்சு, கூந்தல் அலங்காரம், ஃபேசியல், பிளீச்சிங், பெடிக்யூர், மேனிக்யூர், ஆயில் மசாஜ், ஹென்னா கண்டிஷனர், டையிங், வாக்ஸிங், திரெட்டிங், மணப்பெண் அலங்காரம் என ஏராளமான அழகு பராமரிப்பு முறைகள் உள்ளன. இவை அனைத்தையும் முறையாக கற்றுக் கொண்டு இத்தொழிலை தொடங்கலாம்.

இப்பயிற்சியை பெற்ற உடனே இத்தொழிலை ஆரம்பிப்பதை விட ஏதேனும் அழகு நிலையங்களில் பயிற்சி பெற்ற பின் ஆரம்பிப்பதன் மூலம் அனுபவரீதியாக, செய்முறையில் நிறைய விஷயங்களை கற்றுக்கொள்ளலாம். இதன் மூலம் தன்னம்பிக்கையும், ஆர்வமும் அதிகரிக்கும்.